PUBLIC LIBRARY
JAFFNA.

## ★ பூநகரி இழப்பை ஈடுசெய்ய மன்னாரிலிருந்து

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 கார்த்திகை 14 இதழ் 285
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 29-11-1993

## இராணுவம் வாபஸானது

(யாழ்ப்பாணம்)
விடுதலைப் புலிகள் தம் மீது தாக்குதல் நடத்துவார்கள் என்ற அச்சத்தினாலும், பூநகரி கூட்டுப்படைத் தளம் தகர்க்கப்பட்ட தாக்குதலில் கொல்லப்பட்ட, காயமடைந்த படையினருக்குப் பதிலாக ஈடுபடுத்தவும் எனவே சிலாவத்துறை, கொண்டச்சி ஆகிய இரு இராணுவ முகாம்களையும் கைவிட்டு சிறிலங்கா இராணுவத்தினர் சென்றுள்ளனர்.

இவ்வாறு மன்னார் மாவட்ட சிறப்புத்தளபதி ஜான் புலிகளின் குரல் வானொலிக்கு வழங்கிய விசேட பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கை

(3ம் பக்கம் பார்க்க)

## அரச படையினர் மீது ஜனாதிபதி அதிருப்தி

(கொழும்பு)
பாதுகாப்புப்படைகள் அதன் தளபதிகள் மற்றும் இராணுவம் மீது ஜனாதிபதி டி. பி. விஜயதுங்காவிற்கு அதிருப்தி ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. அண்மையில் இராணுவத்தினர் அடுத்து அடுத்து தோல்வி கண்டதை அடுத்தே அவருக்கு அதிருப்தி ஏற்பட்டுள்ளதாம்.

இதனால் இராணுவ தளபதிக்கு தெரியாமல் வடபகுதி

(4-ம் பக்கம் பார்க்க

## ★ யாழ். புனித யாகப்பர் ஆலயம் மீதான

# விமானத்தாக்குதலைக்கண்டித்து

# யாழ். நகரில் மௌன ஊர்வலம்

## வெள்ளியன்று நடைபெறும்

(யாழ்ப்பாணம்)
யாழ். புனித யாகப்பர் ஆலயத்தின் மீது அண்மையில் சுப்பசொனிக் விமானங்கள் நடத்திய குண்டுத் தாக்குதலைக் கண்டித்து எதிர்வரும் 3-ம் திகதி வெள்ளிக்கிழமை யாழ். நகரில் பெரும் மௌன ஊர்வலமொன்று நடைபெறவுள்ளது.

கடந்த 11ம் திகதி யாழ். புனித யாகப்பர் ஆலயத்தில் இடம் பெற்ற விமானக்குண்டு வீச்சைக்கண்டித்தும் மற்றும் வழிபாட்டுத்தலங்கள், மக்கள் குடியிருப்புக்கள் மீதும் நடாத்தப்படும் விமானத்தாக்குதல்களைக் கண்டித்தும் மாபெரும் மௌன ஊர்வலம் ஒன்றை எதிர்வரும் 3ம் திகதி நடாத்த புனித யாகப்பர் ஆலய பங்குத் தந்தை ஆர். எம். ஜி. நேசநாயகம் ஏற்பாடு செய்துள்ளார்.

(3-ம் பக்கம் பார்க்க

## ஜெரி டி சில்வாவின் நியமனம்

### சிசிலுக்கு மூக்கறுப்பு போன்றது

(கொழும்பு)
வடபகுதிக்கான இராணுவ நடவடிக்கை இயக்குநராக மேஜர் ஜெரி டி சில்வா நியமிக்கப்பட்டது, தற்போதைய இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்னவுக்கு ஒரு மூக்கறுப்பு எனக் கொள்ளவேண்டும் என்று பி.பி.சி. தெரிவித்துள்ளது. பி.பி.சி. மேலும் தெரிவிக்கையில், மேற்படி நியமனத்தின் மூலம் சிசில் வைத்தியரத்னவுக்கு ஜனாதிபதி டி. பி.

(4-ம் பக்கம் பார்க்க)

## அம்பாறையில் மோதல் பொலிஸ் அதிகாரி காயம்

(அம்பாறை)
அம்பாறை மாவட்டத்தில் நேற்று முன்தினமிரவு சிறிலங்கா பொலிசாருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் மோதல் ஒன்று இடம்பெற்றதாக வெரித்தாஸ் தெரிவித்தது.

இம்மோதலில் இடம்பெற்ற துப்பாக்கிச் சண்டையில் பொலிஸ் அதிகாரி ஒருவர் படுகாயமடைந்துள்ளார். விடுதலைப்புலிகள் தரப்பில் இருவர் வீரச்சாவு அடைந்துள்ளதாக அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது (ம-ரி)

## படையினரிடையே ஒருங்கிணைப்பு இல்லையாம்

(கொழும்பு)
அரச படையினருக்கு விடுதலைப் புலிகளினால் அடுத்தடுத்து ஏற்பட்ட தோல்வியானது இராணுவ, கடற்படை, விமானப் படை ஆகியவற்றிடையே போதிய ஒருங்கிணைப்பு இல்லை என்பதையே காட்டுவதாக உள்ளதாக

(4ம் பக்கம் பார்க்க)

## குடியிருப்புக்களை நோக்கி நேற்று ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)
யாழ். குடாநாட்டிலுள்ள இராணுவ முகாம்களிலிருந்து நேற்றிரவு பரவலாக ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. மண்டைதீவு, பலாலி, காரைநகர் பகுதிகளில் நிலை கொண்டுள்ள படையினராலே குடியிருப்புக்களை நோக்கி

(4-ம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தில் போதியளவு உணவுப்பொருள் கையிருப்பில

(கொழும்பு)
யாழ்ப்பாணத்தில் உணவுப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு இல்லை என்று யாழ். அரசாங்க அதிபர் தெரிவித்ததாக இலங்கை வானொலி தெரிவித்தது. அடுத்த ஆண்டு வரை வடபகுதி மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யவேண்டிய அத்தியாவசிய உணவுப் பொருட்கள் யாழ்ப்பாணம் உணவுக் களஞ்சியசாலைகளில் போதியளவு கையிருப்பில் இருப்பதாகவும், யாழ். அரசாங்க அதிபர் அத்தியாவசிய சேவைகள் நாயகத்திற்கு அறிவித்துள்ளார் என்றும் அச்செய்தியில்

4ம் பக்கம் பார்க்க)

## 4500பீப்பாமண்ணெண்ணெ யாழ். அனுப்ப ஏற்பாடு

(கொழும்பு)
நத்தார் பண்டிகைக்கு முன்னர் 4,500 பீப்பா மண்ணெண்ணெ யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. கொழும்புத் துறைமுகத்தில் கப்பலில் இம்மண்ணெண்ணெ ஏற்றுவதற்கான நடவடிக்கை

(4ம்பக்கம் பார்க்க)

## மீண்டும் கம்யூனிஸ்ட் கட்சி சமசமாஜக் கட்சி இணைவு

(கொழும்பு)
லங்கா சமசமாசக்கட்சியும், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும் மீண்டும் ஒரே கட்சியாக இயங்குவதற்கு தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த இணைப்பு நாளை 30-ம் திகதி செவ்வாய்க்கிழமை இடம் பெறவுள்ளது. சோசலிசத்தை முன் எடுத்துச் செல்வதற்கு இந்த இரு கட்சிகளும் ஒன்றாக இணைவது அவசியமாக உள்ளது என்று பற்றி வீரக்கோன் தெரிவித்துள்ளார். (ம-ரி)

## இ.தொ.கா. நேற்றுகூடியது ஐ.தே.க. உறவுபற்றி ஆராய்வு

### முடிவு வெளியிடப்படவில்லை

(கொழும்பு)
இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு கொடுப்பதா? இல்லையா? என்பது பற்றி தீர்மானிப்பதற்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் மத்திய குழு நேற்று மாலை கூடியதென்று தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பான முடிவு எதுவும் இக்கூட்டம் முடியும் வரை வெளியிடப்படவில்லை.

இந்தக் கூட்டத்தில் அமைச்சர் தொண்டமான் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தோடும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் காமினி திசநாயக்காவுடனும்

(4ம் பக்கம் பார்க்க)

## மட்டு.நகரில் படையினரால் மாணவர்கள் துன்புறுத்தல்

(மட்டுநகர்)
மட்டக்களப்பு மாவட்டத்தில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா படையினரால் நாள்தோறும் பாடசாலை மாணவர்கள், அலுவலகங்களுக்குச் செல்பவர்கள் நீண்ட நேரம் தடுத்துவைக்கப்பட்டு சோதனைகளுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள்.

இதனால் காலை 8-30மணிக்கு ஆரம்பமாகும் பாடசாலைகளுக்கு மாணவர்கள் மதியம் 12 மணிக்கே செல்லவேண்டியதாகவுள்ளது. இதே போன்ற அலுவலகங்களில் தொழில்புரிபவர்களும் குறிப்பிட்ட நேரத்திற்கு கடமைகளுக்குசெல்லமுடியாதுள்ளது.

இவ்வாறு தடுத்துவைக்கப் படுபவர்கள்படைமுகாம்களில் வேலைசெய்வதற்கும் அமர்த்தப்படுவார்கள். (ம)

## விளம்பரம்

### விற்பனையாகின்றது

பாரளஜியின் விடுதலை புதிர் விலை 150. யாழ்ப்பாணத்தில் சகல புத்தகசாலைகளிலும், தூர்க்கா சுன்னாகம், மொடன் (நவீன களஞ்சியம்) நெல்லியடி, லிலம் சாவகச்சேரி, பிரென்ஸ் (B) கிளிநொச்சி. விலை: 20. (ஏ-3556)

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள டபிள் (ஜேர்மன் நீட்ஸ்) ஆர்மோனியம் விற்பனைக்குண்டு. தொடர்பு: ந. இலகிலேஸ்வரன் சாவகச்சேரி சந்தையடி ஆனைக்கோட்டை. (கி-624)

**வியாபாரம்பெருக விளம்பரம் செய்க**

## வழுக்கை ஆறு பெருக்கெடுத்து ஓடுகிறது

(பண்டத்தரிப்பு)

தற்போது பெய்து வரும் பெருமழையை அடுத்து வழுக்கையாறு பெருக்கெடுத்து ஓடுகின்றது.

அளவெட்டி பிரதேசத்தை குளத்தில் உற்பத்தியாகும் இந்த ஆறு சந்தரோடை, சண்டிலிப்பாய், வட்டுக்கோட்டை ஆகிய இடங்களுக்கு ஊடாக ஓடி அராலிக் கடலில் சங்கமமாகின்றது.

யாழ்.மாவட்டத்திலுள்ள ஒரே ஒரு ஆறு இந்த வழுக்கை ஆறு என்பதும் மாரி காலத்தில் வெள்ளம் ஏற்படும்போது இந்த ஆறு ஓடுகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

72 - கி

## இளம்குடும்பஸ்தர் தற்கொலை

(நெல்லியடி)

குடும்பத்தகராறு காரணமாக நஞ்சருந்திய குடும்பஸ்தர் ஒருவர் கடந்த ஞாயிறு நண்பகல் பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையில் மரணமானார்.

புலோலி தெற்கை சேர்ந்த இளம் குடும்பஸ்தரே இவ்வாறு மரணமானவராவர்.

இதுசம்பந்தமான மரண விசாரணை மந்திகை மருத்துவமனையில் நடைபெற்றபோது உடுப்பிட்டி பகுதி திடீர்மரண விசாரணை அதிகாரி திரு. வி. நடராஜா தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்

## இன்று

(கொழும்புத்துறை)

யாழ். குடாநாட்டில் விநாயகர் விக்கிரகம் உள்ள கோவில்களில் இன்று திங்கட்கிழமை விநாயகர் பெருங்கதையும், விநாயகர் விரதாரம்பமும் விசேட அபிஷேகம் பூசை ஆராதனை வழிபாட்டுடன் நடைபெறும். இப்பிள்ளையார் பெருங்கதை இந்த ஆலயங்களில் தொடர்ந்து 21 தினங்கள் நண்பகல் ஆரம்பமாகி நடைபெறும். பூசை முடிவில் பெருங்கதைப் படிப்பு நிகழ்வு நடக்கும். (154)

★

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கோவில் வீதி, ஸ்ரீராகவேந்திர மிருதிகாவின் இசையாராதனை இன்று திங்கட்கிழமை நல்லை ஆதீனத்தில் மாலை 5-00 மணிக்கு நடைபெறும். செல்வன் லாலித்தகர் வர்ணராஜமேஸ்வரன் இசையாராதனை செய்வார்கள்.

---

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
## யாழ். கிளைத் தலைமையகம்

(1) Sony T. V (20" குறையாத அளவில்)
(2) National Deck — Model No. L 15/L 18

ஆகியன எமது கல்விச் சேவைக்கு தேவைப்படுகின்றன. எனவே அவற்றின் விலையையும், தரவுகளையும் பதிவுத் தபால் மூலம் தபால் உறையின் மேல் (T. V. Deck) என்பதை எழுதி 10 - 12 - 93ற்கு முன்னதாக எமக்கு அனுப்பி வைக்கவும்.

கௌரவ செயலாளர்,
இ. செ. சி. சங்கம், யாழ். கிளை,
73, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

26-11-93. (ஏ-3627)

---

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

## புதிய மாணவர்கள் பதிவு செய்தல்
### 1992/93 கல்வியாண்டு

யாழ். பல்கலைக்கழகத்தில் வெவ்வேறு கற்கை நெறிகளுக்கு 1992/93 கல்வியாண்டிற்கு அனுமதிக்கப்பட்டோர் தங்கள் பதிவை கீழ்க் குறிப்பிட்ட திகதிகளில் மேற்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

| | | |
|---|---|---|
| விஞ்ஞானபீடம் | — | 09 - 12 - 93 உம் 10 - 12 - 93 உம் |
| கலைப்பீடம் | — | 13 - 12 - 93 உம் 14 - 12 - 93 உம் |
| மருத்துவபீடம் விவசாயபீடம் | } | 15 - 12 - 93 |

மேலதிக விபரங்கள் யாழ். பல்கலைக்கழக பரீட்சை அனுமதிகள் கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.

தபால் மூலம் பதிவுகள் 30 - 12 - 93 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேவையான விண்ணப்பப்படிவங்கள் விவசாயபீடம், கிளிநொச்சி இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரி, வவுனியா, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிலும் பெற்றுக்கொள்ளலாம்.

தெரிவு செய்யப்பட்ட மாணவர்களில் எவரேனும் 30-12-93ற்கு முன்பு பதிவை மேற்கொள்ளாவிடின் அவரது தெரிவு இரத்துச் செய்யப்பட்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்படும்.

அனுமதிக்கப்பட்ட மாணவர்கள் பின்வரும் ஆவணங்களை பதிவின்போது சமர்ப்பித்தல் வேண்டும்;

1. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம்
2. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அனுப்பப்பட்ட கடிதம்
3. பிறப்புச்சான்றிதழ் (மூலப்பிரதியும், நிழற்படப் பிரதியும்)
4. பாடசாலை விடுகைப் பத்திரம் (மூலப்பிரதியும, நிழற்படப் பிரதியும்)
5. 8 புகைப்படப் பிரதிகள் (2" X 2½")
6. தேசிய அடையாள அட்டை

பின்வரும் கற்கை நெறி ஒவ்வொன்றுக்கும் பதிவுக்கு உரிய சகல கட்டணங்களையும் யாழ். பல்கலைக்கழகத்தில் காசாகச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டு அல்லது காசுக்கட்டளை அல்லது தபாற்கட்டளையையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| விஞ்ஞான பீடம் | — | ரூபா 305/- |
| மருத்துவ பீடம் | — | ரூபா 350/- |
| விவசாய பீடம் | — | ரூபா 275/- |
| கலைப் பீடம் | — | ரூபா 175/- |

(புவியியலை ஒரு பாடமாகப் பயிலவிரும்பும் மாணவர்கள் ஆய்வுகூட கட்டணமாக ரூபா 100/- மேலதிகமாகச் செலுத்த வேண்டும்)

காசுக்கட்டளை / தபாற்கட்டளை யாழ். பல்கலைக்கழக நிதியாளரின் பெயரில் எடுத்து அனுப்புதல் வேண்டும்.

**பதிவாளர்.**

(ஏ-3628)

---

## அயடின் உப்பை விற்பனைசெய்ய அரசுபணிப்பு

(கொழும்பு)

பாவனைக்காக 'அயடின்' உப்பை வழங்குமாறு உற்பத்தியாளர்களை அரசு கேட்டுள்ளது. உணவு ஆலோசனைக் குழுவின் பொரிசுக்கமைய கசர 4ம் பக்கம் பார்க்க)

---

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்
கணனி கல்வி நிலையங்களுடன்
இணைந்து நடாத்தும்

## கணனி, இலத்திரனியல்
# கண்காட்சி

1993 நவம்பர் 10ம், 11ம், 12ம் திகதிகளில் யாழ் பல்கலைக்கழகத்தில் நடாத்துவதற்கென விளம்பரப் படுத்தப்பட்டு 10ம் திகதியுடன் இடைநிறுத்தப்பட்ட மேற்படி கண்காட்சி, மீண்டும் 1993 டிசெம்பர் 1ம், 2ம் 3ம் திகதிகளில் யாழ். பல்கலைக்கழகத்தில் நடாத்தப் படும் என்பதை அறியத்தருகின்றோம்.

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ★

பிரவேசம்: ரூபா 10/- சிறுவர்களுக்கு ரூபா 5/-

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

(ஏ-3618)

---

அகில இலங்கை இளங்கலைஞர் மன்றம்

## மாதாந்த இசை நிகழ்ச்சி

இந்திரா நகையகம்(கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்) ஆதரவில்

இடம்: மன்றக் கலாமண்டபம், சட்டநாதர் வீதி; நல்லூர்.

காலம்: 30- 11- 1993 செவ்வாய் மாலை 5 மணி

நிகழ்ச்சி நிரல்

மாலை 5-00 — 5-30 வீணை இசை
செல்வி உதயந்தி வாமதேவன் } வீணை
செல்வி சுதர்ஷினி வாசிகசுவநாதன் }
திரு. எஸ். துரைராஜா மிருதங்கம்,
திரு. அ. செல்வரத்தினம் கடம்

5-30 — 6-30 பாட்டு
செல்வி கிருஷ்ணவேணி மயில்வாகனம் பாட்டு
திரு. ஆர். எஸ். கேசவமூர்த்தி வயலின்,
திரு. கே. கண்ணதாசன் மிருதங்கம்

6-30 — 7-00 பரிலிசம்
செல்வி உதயந்தி வாமதேவன் அவர்கள் வாசித்து வழங்குவார்.

7-00 — 7-30 மங்கள விளக்கேற்றல்
1. திரு. கே. எஸ். விபுலானந்தன் அவர்கள் உரிமையாளர் (இந்திரா நகையகம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
2. திரு. நாராயணசாமி தர்மராசா அவர்கள் (வர்த்தகர்) சுருக்ஸ் பிடவை மாளிகை நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

தலைமையுரை: வாகீசவாரிதி சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக்குருக்கள் அவர்கள்

பிரதம விருந்தினர் உரை:
திரு. சுப்பிரமணியம் சோமசுந்தரம் அவர்கள் பிரபல வர்த்தகரும், சமூகசேவையாளருஞ்சுன்னாகம்

7-30 — 8-30 சிறப்பு நிகழ்ச்சி:
நாட்டியக் கலாகேந்திரா மாணவிகள் வழங்கும் பரதநாட்டியம்
நட்டுவாங்கம்; திருமதி கிருஷாந்தி ரவீந்திரா
பாட்டு: செல்வி சாரதா சச்சிதானந்தம்
மிருதங்கம்; எஸ். மகேந்திரன்
நடனம், செல்வி சாந்தினி நடராஜா (நாட்டியக்கலைமணி யாழ். பல்கலைக்கழக நுண்கலைபீடம்)
செல்வி ஜனித்திரா சோமசுந்தரலிங்கம்
வயலின்: செல்வி சாந்தநாயகி சுப்பிரமணியம்

இசை ஆர்வலர்கள் அபிமானிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மேற்படி மன்றத்தினர்

### 14-வது ஆண்டு இசை விழா
### தொடர்ந்து (15) பதினைந்து தினங்கள்

குறிப்பு:- இளங்கலைஞர் மன்ற 14-வது ஆண்டு இசை விழா 6-2-94—20-2-94 வரை பதினைந்து தினங்கள் நடைபெறவுள்ளது. இசை விழாவில் கலந்து நிகழ்ச்சி வழங்க விரும்பும் இளங்கலைஞர்களிடமிருந்து வாய்ப்பாட்டு, வயலின், வீணை, மிருதங்கம், புல்லாங்குழல் என்பவற்றில் தனிக்குழு நிகழ்ச்சிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தங்கள் தகுதியை உறுதி செய்து 30-12 93 ம் திகதிக்கு முன்னர் தலைவர், இளங்கலைஞர் மன்றம், சட்டநாதர் வீதி, நல்லூர் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

மேற்படி மன்றத் தலைவர்.

(கி-625)

PUBLIC LIBRARY
JAFFNA.

**மணிவாக்கு**

ஒரு மனிதன் இன்னொரு மனிதனின் செவிகளுக்காகத் தண்டிக்கப்படக்கூடாது.

— சார்லஸ் லிம்மனர்

# ★ மட்டு. மாவட்டத்தில் மட்டும்
# 15,000 சிறுவர் அனாதைகள்
# 6000 பெண்கள் விதவைகள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவ அட்டூழியங்களில் 15,000 இற்கும் மேற்பட்ட பிள்ளைகள் அனாதைகளாகியுள்ளனர். 6000 இற்கும் மேற்பட்ட பெண்கள் விதவைகளாகியுமுள்ளனர்.

அரச சார்பற்ற நிறுவனமொன்று மேற்கொண்ட ஆய்விலிருந்து இப்புள்ளி விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

1990 முதல் இராணுவத்தினரும், ஊர்காவல் படையினரும் மேற்கொண்ட வன்முறை நடவடிக்கைகளில் பெரும் எண்ணிக்கையிலான தமிழர் கொல்லப்பட்டனர். பெண்கள் பாலியல் வன்முறைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

படையினரால் தமிழரது இருப்பிடங்கள் அழிக்கப்பட அவர்கள் முற்றாக இடம் பெயர்ந்தனர். இராணுவ வன்முறைகளால் குடும்பங்கள் சிதறி பிரிந்துபோனோரின் எண்ணிக்கை அதிகம். இறுவர் நலன்காப்பு நிறுவனம் ஒன்று திரட்டிய புள்ளி விபரத்தின்படி மட்டு மாவட்டத்தில் மட்டும் 15000 சிறுவர்கள் அனாதைகளாகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இராசிபலன்

29-11-1993

திங்கட்கிழமை.

(தமிழுக்கு கார்த்திகை 14)

பூரணை பி. ப. 12-32 வரை, கார்த்திகை காலை 6-38 வரை, இராகுகாலம் காலை 7-48 முதல் 9-13 வரை, சுபநேரம் நண்பகல் 12-13 முதல் 1-43 வரை, விஷ்ணுவாலய தீபம்.

மேஷம்: விரோதிகள் தந்திரம், தொழில் பதற்றம், வெறுப்பு.

இடபம்: மேலான சந்திப்பு, குடும்ப மகிழ்ச்சி, விருந்தோம்பல்.

மிதுனம்: கண்டிப்பு, மனைவி வெறுப்பு, புத்திரர் கவலை.

கடகம்: பொதுத்துறை பாராட்டு, தொழில் லாபம், மன அமைதி.

சிம்மம்: எதிர்பார்த்த உதவி, சுபகாரியம், மன குதூகலம்.

கன்னி: விதண்டாவாதம், அதிகாரிகள் துன்பம், கடும் உழைப்பு.

துலாம்: வெளியார் பகை, தொழில் நஷ்டம், வழிப்பயம்.

விருச்சிகம்: மன கிலேசம், உடல் உபாதை, காரியதடை.

தனுசு: புதிய முயற்சி, வாக்குவன்மை, தொழில் உறவு.

மகரம்: குடும்ப பிரிவு, தவறான போக்கு, நண்பர் விரோதம்.

கும்பம்: எதிர்பார்த்த முடிவு, சகோதர வெறுப்பு, அலைச்சல்.

மீனம்: காரிய பலிதம், தொழில் முதலீடு, திருமண யோகம்.

—ஜோஸ்யர்.

## நமது நோக்கு

### வாழ் வாழ விடுக!!

உடன் பேச்சை ஆரம்பிக்கும்படி நாடாளுமன்றத்தில் அரச எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

தேர்தல் தோல்விக்குப் பயந்து தீர்வு காணப் பின்னிற்பதா என உபசபாநாயகர் காமினி பொன்சேகாவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

சிங்கள மக்கள் சகல உரிமைகளோடும் தமக்குரிய பகுதிகளில் வாழ வேண்டும் என்பதில் இருகருத்து இருக்கமுடியாது. ஆனால் தமிழர்களோ தமது பகுதியில் தலைநிமிர்ந்து உரிமைகளோடு வாழ விடுங்கள் என்பதுதான் கோரிக்கை.

இதில் மூன்று பிரதான அம்சங்களைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

முதலாவதாக தமிழர்கள் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படவேண்டும். அடிக்கடி ஏற்பட்ட இனகலவரங்களின் பின்பு சிங்கள இராணுவத்தின் கொடூரங்களை அனுபவித்த பின்பு அதே இராணுவத்தை நம்பி ஆயுதங்களை கீழே வைத்துவிட்டுப் பேச்சுவார்த்தைக்குப் போக முடியாது.

தமிழர்களைத் தமிழர்களே பாதுகாக்கவேண்டும். அதற்குரிய ஒழுங்குகள் தொடரவேண்டும்.

இரண்டாவதாக தமிழர்களுக்கென தனியான தாயக பூமி இருந்து வந்துள்ளது. ஏற்கனவே நடாத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளிலும் செய்யப்பட்ட ஒப்பந்தங்களிலும் அரச குடியேற்றங்கள் இனவிகிதாசாரத்தை மாற்றக்கூடாது என்பது ஓரளவிற்கு ஒப்புக்கொள்ளப்பட்டது.

தமிழரின் தாயகத்தைத் துண்டாடும் நோக்கம் கைவிடப்படவேண்டும்.

மூன்றாவதாக தமிழரைத் தமிழரே தனிநாடு கண்டு ஆளவேண்டுமென்ற இலட்சியத்தில் இளைஞர்கள் உறுதியாக உள்ளார்கள்.

எனினும் தமிழர்களின் தாயகப்பகுதியில் தமிழர்களே சட்டம் இயற்றி நிர்வகிக்கக்கூடிய வலுவான அமைப்பு ஒன்று உருவாக்கப்படவேண்டும்.

பூரண சுயாட்சி அதிகாரங்கள் சட்டரீதியாக வழங்கப்பட வேண்டும். எந்தத் தந்திர முறையாலும் அவற்றை மீளப்பெறவோ அல்லது மறைமுகமாகத் தலையிடவோ முடியாதளவிற்கு உறுதி செய்யப்படவேண்டும்.

இந்த மூன்று பிரதான அம்சங்களையும் விளங்கிக்கொண்டு இதய சுத்தியோடு தென்னிலங்கைத் தலைவர்கள் செயற்பட்டால் ஏனைய பிரச்சினைகளும் போரினால் ஏற்படும் அழிவுகளும், பொருளாதாரச் சீர்கேடுகளும் தாமாகவே மறைந்துவிடும்.

### பூநகரி இழப்பை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யில் கூறியதாவது: மண்கிண்டி மலை இராணுவமுகாம் தகர்க்கப்பட்டமை ஸ்ரீலங்கா இராணுவத்துக்கு கொடுத்த தாக்கத்தால் 20 மைலுக்கும் கூடுதலான இடத்திலிருந்து இராணுவத்தை அரசு விலக்கி கொண்டது.

தற்போது பூநகரி கூட்டுத்தளம் தகர்க்கப்பட்டமை ஸ்ரீலங்கா அரசுக்குக் கொடுத்த தாக்கமே சிலாவத்துறை, கொண்டச்சி இராணுவ முகாம்களை மூடிவிட்டு இராணுவத்தை எடுக்க வேண்டிய சூழ்நிலையைத் தோற்றுவித்தது. பூநகரிகூட்டுத்தளம் அதனோடு அண்டிய காவலரண்கள் என பெரிய பரப்பில் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தித் தகர்த்துள்ளனர்.

இதேவேளை ஏற்கனவே நாளுட்டானில் இருந்து 20 மைல் பிரதேசத்தில் இருந்து இராணுவம் வெளியேறியுள்ளது. இவ்வாறு இருக்கும் போது சிலாவத்துறை, கொண்டச்சி ஆகிய இராணுவ முகாம்களை விடுதலைப் புலிகள் தாக்கி அழித்துவிடுவார்கள் என்பது இராணுவத் தலைமைப்பீடத்திற்குத் தெரிந்திருந்தது. அத்துடன் பூநகரித் தளப்பகுதி தாக்குதலில் கொல்லப்பட்ட, காயமடைந்த ஆயிரக்கணக்கான படையினருக்கு ஈடாக ஆட்கள் தேவைப்படுகின்றனர். அந்த ஆட்களை நிரப்புவதும் இதன் ஒரு நோக்கம் எனவும் அவர் கூறினார்.

சிலாவத்துறை, கொண்டச்சி முகாம்களில் இருந்து படையினர் வாபஸ் பெற்றதால், மேலும் பெரிய நிலப்பரப்பு இராணுவ ஆக்கிரமிப்பில் இருந்து விடுபட்டுள்ளது. மன்னார் பெருநிலப் பரப்பில் இருந்த இராணுவ அச்சுறுத்தல் இல்லாது போயுள்ளது.

தற்போது இங்கிருந்து இராணுவம் வெளியேறியதை அடுத்து, முசலி உதவி அரசஅதிபர் பிரிவில் உள்ள 36 கிராமங்கள் இராணுவ ஆக்கிரமிப்பில் இருந்து நீங்கியுள்ளன என்றும் அவர் கூறினார்.

—ரி

### யாழ். புனித

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குறிக்கப்பட்ட திகதியில் காலை 9 மணிக்கு ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகும் இந்த மௌனஊர்வலம், பிரதான வீதி, 1ம் குறுக்குத்தெரு, ஆஸ்பத்திரிவீதி, ஸ்ரான்லி வீதி, ஸ்ரான்லி வீதி, நாவலர் வீதி, கோவில் வீதி, கண்டி வீதியூடாக யாழ். செயலகத்தை சென்றடையும்.

செயலகத்தில் ஆலய பங்குத் தந்தையால் யாழ் அரச அதிபருக்கும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளைக்கும் மகஜர் கையளிக்கப்படும். மற்றும் கொழும்பு அதிமேற்றிராணியார், பரிசுத்த பாப்பரசர், கொழும்புக்கான வத்திக்கான் தூதுவர், கொழும்பிலுள்ள சகல வெளிநாட்டுத் தூதரகங்களுக்கும் தபால் மூலம் மகஜர்கள் அனுப்பிவைக்கப்படும்.

மௌன ஊர்வலத்தில் அனைத்து பொது மக்களையும் கலந்து கொள்ளுமாறு வேண்டுதல் விடுக்கப்பட்டுள்ளது.

(ரி)

### யாழ். செயலக
# அலுவலக வாசல்களுக்கு மண் அணை போடப்படுகிறது

(மானிப்பாய்)

யாழ். செயலகத்தின் பல அலுவலக வாசல்களுக்கும் தற்போது மண் அணை போடப்பட்டுள்ளது.

குடாநாட்டில் சில தினங்களாக தொடர்ந்து பெய்து வரும் பெருமழையினால் சேதமுற்ற செயலக மேல்மாடியில் உள்ள வெள்ளம் கீழ்மாடிக்குச் சென்றே வெளியேறுவதால் இங்குள்ள அலுவலகங்களுக்குள் வெள்ளம் உட்செல்லாதவாறு இந்த அணைகள் போடப்பட்டுள்ளன.

இதேவேளை யாழ். பிரதேச செயலர் அலுவலகத்தில் சில பிரிவுகள் தற்போது பழைய பூங்கா வீதியிலுள்ள ஹோட்டலிலும் இயங்குகின்றன.

நிர்வாகப் பரவலாக்கலின் கீழ் இவ்வலுவலகத்திற்குக் கூடுதலான ஊழியர்கள் நியமிக்கப்பட்டுள்ளதனாலும் இடநெருக்கடி காரணமாகவும் இப்பிரிவுகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளன. 71

### தியாகி திலீபன் நினைவாக
# 67,230 பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டன

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பனைவள அபிவிருத்திப் பகுதியினரால் தியாகி திலீபன் நினைவாக கடந்த மாதம் கிராமிய உற்பத்திக் குழுக்கள் மூலமாக பொதுமக்களையும் ஒன்றிணைத்துப் பனம் விதை நடுகை மேற்கொள்ளப்பட்டது.

இந்த நடவடிக்கையின் போது சுமார் 67,230 பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டதோடு தொடர்ந்து பராமரிக்கும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வலிகாமம் கோட்டத்திலே உடுவில் வட்டத்திலே 7500 விதைகளும், சங்கானை வட்டத்தில் 6600 விதைகளும், நல்லூர் வட்டத்தில் 2580 விதைகளும், யாழ் வட்டத்தில் 1200 விதைகளும் சண்டிலிப்பாய் வட்டத்தில் 4400 விதைகளும், கோப்பாய் வட்டத்தில் 9000 விதைகளும் நடுகை செய்யப்பட்டன.

தென்மராட்சிக் கோட்டத்திலே கொடிகாமம் வட்டத்தில் 2250 விதைகளும், கைதடி வட்டத்தில் 1400 விதைகளும், பளை வட்டத்தில் 3620 விதைகளும், சாவகச்சேரி வட்டத்தில் 1500 விதைகளும் நடுகை செய்யப்பட்டதோடு வடமராட்சிக் கோட்டத்திலே கரவெட்டி வட்டத்தில் 10,000 விதைகளும், பருத்தித்துறை வட்டத்தில் 16,580 விதைகளும் நடுகை செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

(கி

### யாழ். ஆஸ்பத்திரியில்
# மருந்து தட்டுப்பாடு

(கொழும்புத்துறை)

யாழ். போதனா வைத்திய சாலையில் முக்கியமான மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

சில அத்தியாவசிய மருந்துவகைகளுக்கும் சில ஊசி மருந்துகளுக்கும் தட்டுப்பாடு நிலவி வருவதாகத் தெரியவருகிறது.

முக்கியமாக, பிறந்தவுடன் சிசுக்களுக்கு போடப்படும் காசநோய்த் தடுப்பூசிக்கு (பி.சி.ஜி.) கடந்த ஒருவாரத்திற்கு மேலாக பலத்த தட்டுப்பாடு நிலவி வருகிறது.

—154—சி

# மலேரியா நோய்
## வேகமாக பரவுகிறது

(கொழும்புத்துறை)

வவுனியா, கிளிநொச்சிப் பகுதிகளில் மலேரியா நோய் அதிதீவிரமாகப் பரவி வருவதாக அங்கிருந்து வந்தவர்கள் மூலம் தெரிய வந்துள்ளது.

கிளிநொச்சிப் பகுதியில் நுளம்புத் தொல்லை அதிகரித்துள்ளதாகவும் தெரியவருகிறது. இதேவேளை மலத்தீன் மருந்து தட்டுப்பாட்டால் நுளம்புத் தொல்லையைக் கட்டுப்படுத்த முடியாதுள்ளது.

வடமராட்சி கிழக்குப் பிரிவிலும் இந்நோய் அதிகரித்துக் காணப்படுவதாகவும் மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது.

—154—சி

# நவாலியில் பல வீடுகள் வெள்ளத்தில் மூழ்கின

(மானிப்பாய்)

நவாலியில் பல வீடுகள் அகதி முகாம்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

குடாநாட்டில் கடந்த சில தினங்களாக தொடர்ந்து பெய்துவரும் பெருமழையினால் நவாலி அரசடி முகாம் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. இம்முகாமில் அராலியிலிருந்து இடம்பெயர்ந்து வந்த 86 குடும்பங்கள் தங்கியிருந்தன. தற்போது இவர்கள் அயலிலுள்ள வீடுகளிலும், பாடசாலைகளிலும் தங்கியுள்ளனர்.

மேலும் நவாலி கிழக்கு தெற்குப் பகுதியிலுள்ள ஐம்பதுக்கு மேற்பட்ட வீடுகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. பல வீடுகளில் சுவர்கள் விழுந்துள்ளன. இங்குள்ள இன்னப்பா வீதி, சங்கானை வீதிகளில் மூன்றடி வெள்ளம் தேங்கி நிற்கின்றது.

(71—இ)

### பயிற்சி நெறி

(கொழும்புத்துறை)

யாழ். மாநரசபையால் நடாத்தப்படும் பாடசாலை ஆசிரியர்களுக்கான ஒரு மாத பயிற்சிநெறி இன்று ஆரம்பமாகிறது. (154)

**நெடுஞ்சாலையெங்கும் நிழல் மரம் - வை - மக்கள்**
**கொடும் வெயில் தணிவார் நெடுங்காலம் மெய்**

## வட இந்திய தேர்தல்

# பி.ஜே.பி.க்கு பலத்த சோதனை

## உத்தரபிரதேஷில் பின்தங்கியது

(புதுடில்லி)

வட இந்தியாவில் மூன்று மாநிலங்களிலும் ஒரு யூனியன் பிரதேசத்திலும் நடைபெற்று முடிந்த சட்டப் பேரவை தேர்தலில் இமாலயப் பிரதேசத்தில் இந்திரா காங்கிரஸ் கட்சி அறுதிப் பெரும்பான்மைப்பலத்தைப் பெற்றுள்ளது.

டில்லி சட்டப்பேரவையில் பாரதிய ஜனதாக்கட்சி அறுதிப் பெரும்பான்மையைப் பெற்றுள்ளது. உத்தரப்பிரதேசத்தில் சமாஜவாதிக்கட்சி பகுஜனசமாசனாதிக் கூட்டணி முன்னணி வகிக்கிறது

இமாசலப்பிரதேச மொத்த உறுப்பினர் 68. முடிவுகள் அறிவிக்கப்பட்ட இடங்கள் 55 41 இடங்களை இ. காங்கிரஸ் கைப்பற்றியுள்ளது. பி.ஜே.பி. - 08, சுயேட்சை - 06.

டில்லி சட்டப்பேரவை தேர்தலில் இன்னும் 04 முடிவுகள் மட்டுமே அறிவிக்கப்பட வேண்டிய நிலையில் 3/2 பங்கு பெரும்பான்மை பெறுவதற்கு பி. ஜே. பி.க்கு இன்னும் ஒரு இடம் மட்டுமே தேவை.

டில்லி சட்டப் பேரவையில் மொத்த இடங்கள்-70. முடிவுகள் வெளியானவை, 66, பி. ஜே. பி. 46, இ. காங்கிரஸ்-14 ஜனதாதள-04, சுயேட்சை-02.

உத்தரப்பிரதேசத்தில் மொத்தம் 400. முடிவுகள் அறிவிக்கப்பட்டவை-81 பகுஜன் சமாஜவாதி கூட்டணி-34, பி. ஜே. பி. 33, காங்கிரஸ் ஐ.-07, ஜனதாதள- 4, சி பி. ஐ. எம்.-01, சுயேட்சை-02.

ராஜஸ்தான் மொத்தம்-200 முடிவுகள் அறிவிக்கப்பட்டவை-99, பி. ஜே பி.-22. காங்கிரஸ்-15, ஜனதாதள-01 நடைபெற்ற இடங்கள்-199. அறிவிக்கப்பட்ட முடிவுகள்-41 பி. ஜே பி. சுயேட்சை-03.

(ஏ.பி)

## மகாராஷ்டிராவில்

# நிலக்கண்ணி வெடியில் 11 படையினர் பலி

(புதுடில்லி)

மகாராஷ்டிராவில் பொலிஸ் நிலையம் அருகே ரோந்துப் பணியில் ஈடுபட்ட பொலிசார் மீது நடத்தப்பட்ட நிலக்கண்ணிவெடித்தாக்குதலில் ஒரு பொலிஸ் சார்ஜன்ட் உட்பட 11படையினர் ஸ்தலத்தில் கொல்லப்பட்டனர்.

நக்ஸலைட்டுகளே இந்நிலக்கண்ணிவெடியை வைத்திருக்கலாமென பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதற்கிடையில் உயர் பொலிஸ் அதிகாரிகள் குழு ஒன்று ஸ்தலத்திற்கு நேரடி விஜயம்செய்து விசாரணைகளை நடாத்தி வருகிறது. (ஏ-பி)

## வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)

பூநகரி இராணுவ முகாம் தாக்குதலில் விழுப்புண் ஏற்று சிகிச்சை பெற்று வந்த லெப். செங்கதிர் அல்லது நிருபன் (தம்பித்துரை மோகன் யாழ்ப்பாணம்) என்ற போராளி வீரச்சாவு அடைந்துள்ளார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர்.

## தச்சு, மேசன் தொழில் ஒய்வூதியம்

(கொழும்பு)

தச்சதொழில், மேசன்வேலை ஆகியவற்றில் ஈடுபடுகின்ற தொழிலாளர்களுக்கு ஒய்வூதிய திட்டமொன்றைக் கொண்டுவர அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக எரிபொருள் மின்சக்தி அமைச்சர் சத்திரா பண்டார தெரிவித்தார்.

உத்தேச ஒய்வூதிய திட்டம் விவசாயிகளுக்கான ஒய்வூதிய திட்டத்தைப் போன்றதாக இருக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (நி)

## பாம்பு கடித்து மரணம்

(யாழ்ப்பாணம்)

முரசுமோட்டையில் பாம்புக்கடிக்கிலக்கானவர் நேற்று யாழ் ஆஸ்பத்திரியில் மரணமானார்.

முரசுமோட்டையைச் சேர்ந்த சிவபாதம் சிவசங்கர் வயது 29 என்ற இளைஞனே மரணமானவராவார். (நி)

## பணியாளர் செல்லவில்லை

(யாழ்ப்பாணம்)

க.பொ.த.(சா/த) பரீட்சை வினாத்தாள்களை கொழும்பு சென்று நேரில் பெற்று வருவதற்காக யாழ். கல்விப்பணிப்பாளர் திரு. சந்திரசாமி நேற்று கொழும்பு செல்வதற்குச் சென்றபோதும் இறுதி நேரத்தில் அவரது பயணத்தில் தடங்கல் ஏற்பட்டு அவர் செல்லவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (நி)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வீடியோப் படப்பிடிப்பாளர்கள் வீடியோ நாடா விநியோகதர்களுக்கான கலந்துரையாடல் நாளை 30ம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்கு அரசியல்துறை, யாழ். மாவட்டச் செயலகம், கோண்டாவிலில் நடைபெறவுள்ளது. அனைத்து வீடியோப் படப் பிடிப்பாளர்களையும், வீடியோ நாடா விநியோகஸ்தர்களையும் இக்கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். (நி)

### அயடின்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

தார அமைச்சர் இந்தச் சட்டமூலத்தைப் பிறப்பித்துள்ளார்.

இது சம்பந்தமான புதிய சட்டம் அமுலுக்கு வரவுள்ளது. பொதுமக்கள் பயன்படுத்துவதற்காக அயடின் உப்பைத் தவிர வேறு எந்த வகையான உப்புக்களையும் உற்பத்திசெய்வது, களஞ்சியப்படுத்துவது, விற்பனை செய்வது, போக்குவரத்துச் செய்வது இறக்குமதி செய்வது ஆகியவற்றில் எவரும் ஈடுபடக்கூடாது.

ஆயினும் தொழில்துறை, விவசாயத்துறை, மருத்துவத் துறை போன்றவற்றுக்கு ஏனைய உப்பு இனங்களைப் பயன்படுத்தலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. -இ-நி

# பூநகரி தாக்குதலால் மக்களை

## அழிவிலிருந்து காப்பாற்றினோம்

### மாவீரர் தின கூட்டத்தில் இளம்பரிதி

(நெல்லியடி)

"யாழ் குடா மீது பாரிய படையெடுப்பை நடத்தி, எமது மக்களை அழிப்பதற்கு அரசும், சிங்களப் படையும் மேற்கொள்ள இருந்த முயற்சியை முறியடித்து எமது மக்களை அழிவிலிருந்து காப்பாற்றிவிட்டோம்" இவ்வாறு யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சி. இளம்பரிதி தெரிவித்தார்

வடமராட்சி வதிரி டயமன் மைதானத்தில் நடைபெற்ற மாவீரர் தினக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் அங்கு பேசுகையில் கூறியதாவது.

"பூநகரித்தளம் மீதான எமது தாக்குதல் எதிரிக்கும் உலகுக்கும் ஒரு முடிவைக் கொடுத்ததுடன் பூரண வெற்றியடைந்த எமது போராட்டத்தின் நீங்கள் தனியிடமுடியாது என்பதை உலகுக்கு எடுத்துக்காட்டியுள்ளது"

எமது எதிரிகளான சிங்கள அரசும், சிங்களப் படையும் இன்று நிலைகுலைந்து, பலவீனம் அடைந்து நிலைகுலைகின்றனர்

பூநகரித்தளம் மீதான தாக்குதலில், 450 போராளிகள் வீரச்சாவடைந்து தமிழீழத்திலுள்ள இலட்சக்கணக்கான மக்களின் அழிவைக் காப்பாற்றினார்கள். இதனை எமது மக்கள் புரிய வேண்டும். இவர்கள் எம்மக்களின் உயிரை நேசித்தவர்கள் அதன் வழியில் இன்று மக்கள் மத்தியில் மாவீரர்கள் வியூகித்திருக்கிறார்கள்.

எதிரியிடம் ஆட்பலம் ஆயுதபலம் நிறைய உண்டு அப் பலங்களை வைத்து எம்மை அசைக்கமுடியாது ஒரு குறுகிய காலப் பகுதியில் எம் மண்ணை நாம் மீட்போம்.

எமது சுதந்திரத்தை அழித்து தமிழர்களில்லாத ஒரு இன அழிவை உருவாக்க சிங்கள பேரினவாதமும் ஒன்று சேர்ந்து பயங்கர நோக்கங்கள் கொண்ட ஆயுதங்களும் எம்மை அழிக்க முனைகிறது. பயங்கரவாத தன்மையை போசுக்கி எம்மக்களின் வாழ்வை நிலை நாட்டுபவர்களே மாவீரர்களாவர்.

பூநகரிப் பாதையைத் திறந்து பிரயாணம் செய்ய மேலதிகமாக ஆயிரம் போராளிகள் வேண்டும் அப்போது இப்பாதை தொடரும்.

இத்தோடு இன்னுமொரு பலமும் எமக்குச் சேர்ந்தால் ஆனையிறவு முகாமையும் எம்மால் பிடிக்க முடியும் அவ்வேளை இந்த மண்ணையும் முழுமையாக மீட்கமுடியும் என்றும் குறிப்பிட்டார் (160:8)

### படையினரிடையே

1-ம் பக்கத் தொடர்ச்சி

கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய தோல்விகளை அடுத்தே ஜனாதிபதி டி பி விஜேதுங்க புதிய நியமனத்தை மேஜர் ஜெனரல் ஜெரி டி. சில்வாவுக்கு வழங்கியுள்ளதாகவும் மேலும் கருத்து தெரிவிக்கப்படுகிறது. (ஏ-பி)

### 4500 பீப்பா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் இரவு நேரத்தில் தெரு விளக்குகளுக்கு பயன்படுத்துவதற்கென போதியளவு மண்ணெண்ணை யாழ். மாநகர ஆணையாளருக்கு வழங்கப்பட்டுள்ளது. (நி)

### குடியிருப்புக்களை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இத்தாக்குதல்களின் ஏற்பட்ட சேதவிபரம் எதுவும் கிடைக்கவில்லை இதேவேளை நேற்றிரவு புக்காரா விமானம் யாழ் நகர் மீது பறந்தபடி வட்டமிட்டுச் சென்றது.

பூநகரிப் பகுதியிலிருந்து நேற்றிரவு துப்பாக்கிச் சூட்டுச்சத்தங்களும் ஷெல் சத்தங்களும் கேட்டன. இப்பகுதியில் புக்காரா விமானங்களிலிருந்து குண்டு வீச்சும், ஹெலிகொப்டரிலிருந்து 50 கலிபர் தாக்குதல்களும் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (நி)

## படையிலிருக்கு உதவ

## அமைச்சு கலந்துரையாடல்

(கொழும்பு)

வடக்கில் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் படையினருக்கு உதவும் பொருட்டு உணவு கூட்டுறவுத்துறை அமைச்சு கலந்துரையாடல் ஒன்றை நடத்தவுள்ளது.

இன்று கொழும்பில் நடைபெறவுள்ள இக்கூட்டத்திற்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹமில்டன் வனசிங்க இராணுவதளபதி சிசில் வைத்தியரத்ன ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

படையினருக்குதேவையான பொருட்களைச் சேகரிப்பது பற்றி இக்கலந்துரையாடலில் ஆராயப்படுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (நி)

### ஹெரி டி சில்வாவின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விஜயதுங்காவிடம் சற்று மனத்தாங்கல் உண்டென்றும் மேலும் இந்த நியமனத்தின் மூலம் இராணுவத் தளபதிகள் மற்றும் உயர் அதிகாரிகள், சிப்பாய்கள் ஆகியோரிடம் ஜனாதிபதி டி பி. விஜயதுங்காவுக்கு நம்பிக்கை இல்லை என்பதையே இது காட்டுகின்றது என்றும் குறிப்பிட்டுள்ளது.

மேலும் அடுத்த வருடம் இவரது பதவிக் காலம் முடிவடைந்தவுடன்) ஒரு விநாடி தானும் தளபதி பொறுப்பில் சிசில் வைத்தியரத்ன இருக்க மாட்டார் என்றும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (க - நி)

### அரச படையினர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கை பொறுப்பாளராக ஜெரிசில்வாவை நியமித்தமை என்று தெரிவிக்கப்படுகிறது

தற்போது நடவடிக்கை இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ள ஜெரி. டி. சில்வா இராணுவத்தின் தலைமை தளபதியாக இருந்துவருகிறார். விரைவில் பதவியிலிருந்து ஒய்வுபெற வேண்டிய நிலையிலிருக்கிறார். அப்படிப்பட்டவருக்கு ஓராண்டு பதவி நீடிப்பு அளித்து வடபகுதி ராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொறுப்பையும் டி. பி. விஜயதுங்கா அவரிடம் ஒப்படைத்துள்ளார்.

மண்கிண்டிமலை, பூநகரி கூட்டுப்படை முகாம் தாக்குதல்களில் இராணுவம் தோல்வியடைந்துள்ளமையே ஜனாதிபதி டி. பி. விஜயதுங்காவின் அதிருப்திக்கு காரணமாகும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (நி)

# நீச்சலில்ஈடுபட்டவர் நீரில் மூழ்கி மரணம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி முத்துமாரியம்மன் ஆலய கேணியில் கார்த்திகை விளக்கீடு நடந்துகொண்டிருந்தபொழுது ஆயிரம் ரூபா பந்தயம்பிடித்து நீச்சலபோட்டியில் ஈடுபட்ட இளைஞர் ஒருவர் நீரில்மூழ்கி மரணமடைந்துள்ளதாக தெரியவருகிறது.

நேற்று மாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் யாழ். அத்தியடியைச் சேர்ந்த நாதன் (முருகன் 23வயது) என்பவரே இறந்தவராவார்.

இறந்தவரின் உடல் நேற்று மாலை வரை கேணியிலிருந்து மீட்கப்படவில்லைஎனவும் தெரிவிக்கப்பட்டது. (இ-நி)

### இ.தொ.கா.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நடத்திய பேச்சுவார்த்தைகளின் விபரங்களை மத்திய செயற்குழுவுன் எடுத்துள்ளதாக கூறப்படுகிறது

தோட்டத் தொழிலாளர் நலன்களில் அக்கறையின்மை மற்றும் தனது அமைச்சின் கீழுள்ள தொழில் நுட்ப பயிற்சியை நிறுத்துவதற்கு ஐக்கிய தேசியக்கட்சி தீ. மானிதம்ருப்பது போன்ற நடவடிக்கைகளில் தற்பொழுது அரசாங்கம் ஈடுபட்டு வருகின்றது என்று அமைச்சர் தொண்டமான் கூறியுள்ளார். (ம-நி)

## காயமடைந்தவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

கடந்த 14ம் திகதி வரணி குடமியனில் இடம்பெற்ற சுப்பசொனிக் குண்டுவீச்சின்போது படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவர்களில் ஒருவர் நேற்றுமுன்தினம் மரணமானார்.

கனகலிங்கம் இராசபூபதி (வயது 23) என்பவரே மரணமானவராவார். (நி)

### யாழ்ப்பாணத்தில்

(1ம் பக்கத்தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டுள்ளது.

8,156 மெற்றிக் தொன் அரிசி, 3,400 மெற்றிக் தொன் மா, 1,800 மெற்றிக் தொன் பருப்பு மற்றும் போதியளவு பால்மா, தேயிலை, தானிய வகைகள் இந்தக் கையிருப்பில் அடங்கியிருப்பதாகவும் அவர் அறிவித்துள்ளார்.

இதேவேளை, கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் 4,500 பீப்பா மண்ணெண்ணை யாழ்ப்பாணத்தில் விநியோகிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, பாதுகாப்புக் காரணங்களுக்காகத் தடை செய்யப்பட்ட பொருட்கள் தவிர ஏனைய பொருட்களை, யாழ். வர்த்தகர்கள் எவ்வித கட்டுப்பாடுகளும் இன்றிக் கொழும்பில் இருந்து கொள்வனவு செய்து, கப்பல் மூலம் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கமுடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. -நி

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஆதரவாளர்களால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1998-ம் ஆண்டு நவம்பர் மாதம் 29-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Sri Lanka under Licence Number B/10/336/B1